
# Proceedings of the International Research Conference on Humanities and Social Sciences

IRCHS 2012



## Honouring the Past, Treasuring the Present, Navigating the Future : Making Knowledge to Deliver

*Faculty of Humanities and Social Sciences*
*University of Sri Jayewardenepura*

# Proceedings of the First International Research Conference on Humanities and Social Sciences 2012

**Honouring the Past, Treasuring the Present, Navigating the Future: Making Knowledge to Deliver**

**08th & 09th November 2012**

**Faculty of Humanities and Social Sciences**
**University of Sri Jayewardenepura**
**Nugegoda**
**Sri Lanka**

Proceedings of the International Research Conference on Humanities and Social Sciences 2012
Faculty of Humanities and Social Sciences
University of Sri Jayewardenepura

292 Pages

ISSN: 2279 - 2309

Copyright © FHSS
All rights are reserved according to the Code of Intellectual Property Act of Sri Lanka, 2003
Published by: IRCHS 2012 and Faculty Humanities and Social Sciences, University of Sri Jayewardenepura

Tel/Fax: +94 (0) 11 2803196

**Disclaimer**
The responsibility for opinions expressed, in articles, studies and other contributions in this publication rests solely with their authors, and this publication does not constitute an endorsement by the IRCHS or FHSS of the opinions so expressed in them.

Official website of the Conference
http://www.sip.ac.lk/fa/irchs/2012

# போர்த்துக்கேயர்கள், ஒல்லாந்தர்கள் ஆட்சியில் யாழ்ப்பாண இஸ்லாமியர்களின் நடவடிக்கைகள் - ஒரு வரலாற்றுப் பார்வை

**கலாநிதி க.அருந்தவராஜா**
**சிரேட்டவிரிவுரையாளர்**
**வரலாற்றுத்துறை**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.**
***arunn.msu@gmail.com.***

பல்லினச் சமூகத்தவர்கள் வாழ்ந்து வருகின்ற யாழ்ப்பாணக் குடாநாட்டில் இஸ்லாமிய மக்களுக்கென அச்சமூகத்தில் தனியான சிறப்பும் அவர்களுக்கென அப்பகுதியில் நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியமும் உண்டென்பது மறுப்பதற்கில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டில் இஸ்லாமிய மக்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் தொடர்பாகப் பலதரப்பட்ட கருத்துக்கள் காணப்பட்டபோதிலும் யாழ்ப்பணத்தரசர்கள் காலத் துடன் குறிப்பாக கிபி 13ஆம் நூற்றாண்டிலிருந்துதான் யாழ்ப்பாணத்தில் இவர்களது குடியேற்றங்கள் நல்லூரை அண்டிய பகுதிகளில் ஏற்பட்டிருந்தமை தொடர்பான சான்றுகள் அதிகளவில் கிடைத்துள்ளன. இருப்பினும் ஏற்கனவே யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையிலான வர்த்தகத்தொடர்புகள் கி.பி 8ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே காணப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதனைச் சமகாலத்து யாழ்ப்பாணத்தரசர்கள் தொடர்பாக எழுந்த இலக்கியங்கள் மற்றும் போர்த்துக்கேய ஆவணங்களில் காணப்படுகின்ற குறிப்புக்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது. போர்த்துக்கேயர்களது காலத்திலும்சரி தொடர்ந்துவந்த ஒல்லாந்தர்கள் காலத்தலும்சரி யாழ்ப்பாணக் குடாநாட்டில் தங்களுக்குரிய சமூக பொருளாதார பண்பாட்டு அடையாளங்களைப் பின்பற்றி வந்தவர்களாகவே முஸ்லிம் மக்கள் இருந்து வந்துள்ளனர். போர்த்துக்கேயர்களுடைய காலத்தில் மதரீதியான அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்ட இவர்கள் ஒதுங்கி வாழவேண்டியநிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். பின்வந்த ஒல்லாந்தர்களது ஆட்சிக்காலத்திலும் ஏறத்தாள இதேநிலைதான் இஸ்லாமியர்களுக்கு எதிரானதாகக் காணப்பட்டபோதும் அவர்களது ஆட்சிக்காலத்தின் இறுதியில் அளிக்கப்பட்ட மதச்சுதந்திரத்தின் பின்னணியில் முஸ்லிம் மக்கள் தங்களைப் பல விடயங்களிலும் ஓரளவுக்குச் சுதாகரித்துக்கொள்ள முடிந்தது. ஆங்கிலேயர்களது ஆட்சியில் மீளவும் எழுச்சியுற்றுத் தங்களை ஒரு வர்த்தகப் பிரிவினர்களாக இனங்காட்டிக்கொண்டதுடன் கல்வி உட்படப் பல்வேறு துறைகளிலும் யாழ்ப்பாணத்தில் இவர்கள் ஈடுபாடு காட்டிக்கொண்டனரெனலாம்.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர்கள் மற்றும் ஒல்லாந்தர்களுடைய ஆட்சிக்காலங்களில் வாழ்ந்த இஸ்லாமியர்களதுநிலை, அவர்களது செயற்பாடுகள் போன்றவை தொடர்பாக ஓரிருவரைத் தவிர இதுவரை காலமும் யாரும் விரிவாக ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. அந்தவகையில் போர்த்துக்கேயர்களது காலம் அதனைத்தொடர்ந்து ஏற்பட்ட ஒல்லாந்தர்களது காலம், இவ்விரண்டு காலப்பகுதிகளுக்கிடையில் யாழ்ப்பாணத்து இஸ்லாமியர்களது நடவடிக்கைகள், அவற்றிலேற்பட்ட ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாகவும் அவர்கள் யாழ்ப்பாணத்துத்

தமிழ்மக்களுடன் வைத்திருந்த உறவுநிலை தொடர்பாகவும் ஒப்பிட்டு ஆவணப்படுத்துவதனை இவ் ஆய்வுக்கட்டுரை தனது பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

இவ்வாய்வுக் கட்டுரையில் முதல்தர மற்றும் இரண்டாந்தரச் சான்றுகள் வரலாற்று அணுகு முறையின் அடிப்படையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. கல்வெட்டுக்கள், நாணயங்கள், கட்டிட அழிபாடுகள் போன்றனவும் குடியேற்றங்கள் இடம்பெற்றதாகக் கருதப்படுகின்ற 13ஆம் நூற்றாண்டுக்குப் பின்னதான யாழ்ப்பாணத்தரசர்கள் காலத்தேய இலக்கியங்கள் பிரதான முதல்தரச் சான்றுகளாக உள்ளவாங்கப்பட்டுள்ளன. பிற்பட்ட காலங்களில் முதல்தர சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இலக்கியங்கள், கட்டுரைகள் என்பனவும் ஆய்வின் தேவை கருதிப்பயன்படுத்தப்பட்டுள்ளன.

போர்த்துக்கேயர்கள் மற்றும் ஒல்லாந்தர்களுடைய காலங்களில் இஸ்லாமிய மக்கள் யாழ்ப்பாணத்தில் அரசியல் மற்றும் மதரீதியான அடக்குமுறைகளுக்கு உட்பட்டவர்களாகக் காணப்பட்டனர். பொருளாதாரரீதியில் அவர்கள் முன்னேறுவதற்கான அனைத்துக் கதவுகளும் அடைக்கப்பட்டன. இருப்பினும் அவர்கள் தங்களது பரம்பரை வர்த்தகத்தினைக் கைவிடாமல் இன்றுவரை தங்களது வாழ்வாதாரத்துக்கு அடிப்படையாக அதனை வைத்துள்ளனர். அவர்களது தனிப்பட்ட மதரீதியான அடையாளங்களையும் ஐரோப்பியர்களால் அழிக்கமுடியவில்லை.

***Key words:*** *இஸ்லாமிய சமூகம், வாழ்வாதாரம், மதஅடக்கு மறைகள், ஒதுங்கிவாழ்தல்,*